2010 ஏப்ரல் 21]

குறிப்பிட்டிருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையில் இருக்கக்கூடிய சாலைகளை நேரடியாக அரசு ஒதுக்குகிற நிதியை வைத்து மேம்பாடு செய்து விடலாம். ஊராட்சி ஒன்றியச் சாலையை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி நேரடியாக நாங்கள் எடுத்துக்கொள்ள இயலாது. அங்கு இருக்கக்கூடிய, எந்த உள்ளாட்சி அமைப்புக்குச் சொந்தமான சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பதற்கு உள்ளாட்சி அமைப்பினர் தீர்மானம் நிறைவேற்றி, அதற்கு பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக அந்தத் துறையினுடைய செயலர் வரைக்கும் வந்து, அந்த துறையினுடைய அமைச்சரான மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்குச் சென்று, அதற்குப் பிறகு, இறுதியாக நிதித் துறை அமைச்சரின் ஒப்புதல் பெற்றுதான் அந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொண்டு, அதை மேம்பாடு செய்ய முடியும். அதுவும், நிதிநிலைமைக்கேற்ப நிதித் துறை ஒப்புதல் தந்தால்தான், அந்தப் பணியை மேற்கொள்ள முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஏற்படும்பட்சத்தில் அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

80—

காலணி அலகு

***107893—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் வட்டம், நத்தக்காடையூர், குட்டப்பாளையம், நல்லம்மாள்புரம் பகுதிகளுக்குத் தமிழ்நாடு கதர்த் துறைமூலம் காலணி அலகு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2010 ஏப்ரல் 21

(அ) காங்கேயம் வட்டம், நத்தக்காடையூர், குட்டப்பாளையம், நல்லம்மாள்புரம் பகுதிகளுக்கு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்மூலமாகக் காலணி அலகு அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் வட்டம், நத்தக்காடையூர், நல்லம்மாள்புரம் பகுதிகள் ஆதி திராவிட மக்கள் நிறைந்து வாழ்கிற பகுதி. அதிகமான ஏழையெளிய மக்கள் வாழ்கிற பகுதியாக இருக்கிற காரணத்தினாலே அங்கே KVIC மூலமாக, அல்லது TAHDCO நிதியுதவி மூலமாக, சிறுதொழில் துறை மூலமாக, காலணி அலகுகள் அமைக்கிற திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று கேட்டு, அதைப்போல, வேலூர் மாவட்டம், ஆம்பூர், வாணியம்பாடி, ஈரோடு மாவட்டம், ஈரோடு, திண்டுக்கல் போன்றவை தோல் தொழில் நிறைந்த பகுதிகள். தோல் அதிகமாக உற்பத்தி செய்கிற பகுதிகள். அங்கே, தோல் தொழில் குழுமம் (Leather cluster) அமைப்பதற்கு கதர்த் துறைமூலம் சிறு தொழில் துறைக்குப் பரிந்துரை செய்து மத்திய அரசு உதவியோடு, தோல் தொழில் குழுமம் அமைக்க அமைச்சர் அவர்சள் முன்வருவாரா என்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 15 தோல் தொழில் அலகுகள் உள்ளன. அவை ஆம்பூர், பெரம்பலூர், பல்லாவரம், திருப்பூர், கோயம்புத்தூர், சேலம், முத்தூர், சித்தோடு, திருச்சி, சேந்தமங்கலம், திண்டுக்கல், வேலூர், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற பகுதிகளில் உள்ளன. மேலும், குறிப்பிட்டுச் சொன்னால், திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காங்கேயம் அருகிலுள்ள திருப்பூர் மற்றும் முத்தூர் ஆகிய இரண்டு இடங்களிலும், ஈரோடு மாவட்டத்தில் சித்தோடு என்ற இடத்தில் ஒரு காலணி அலகும் செயல்பட்டு வருகின்றன. எனவே, மேலும்

2010 ஏப்ரல் 21]

காங்கேயம் தொகுதியிலுள்ள காங்கேயம் சர்வோதய சங்கங்கள் மற்றும் படியூர் சர்வோதய சங்கம் ஆகியவை ஆண்டொன்றுக்கு, சுமார் 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் காலணிகள் தயாரித்து விற்பனை செய்து வருகின்றன. இச்சங்கங்களின் மூலமும் சுமார் 100-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பயனடைந்து வருகின்றனர். எனவே, காங்கேயம் வட்டத்தில் நத்தக்காடையூர், குட்டப்பாளையம், நல்லம்மாள்புரம் ஆகிய பகுதிகளில் புதிதாகக் காலணி அலகுகள் ஏற்படுத்தும் அவசியம் எழவில்லை.

முற்பகல் 10-25

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள் கேட்டதுபோல, அந்தப் பகுதியில் தொழிலாளர்கள் அதிகமாக இருந்து, அவர்களுக்கு வேலை வழங்க வேண்டுமென்று எண்ணினால், தற்போது அம்பத்தூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய காலணி அலகுகளில் உற்பத்தி செய்ய, தமிழ்நாட்டில் பணியாளர்கள் கிடைக்காமல் உத்தரப்பிரதேச மாநிலம் ஆக்ராவிலிருந்து நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வந்து பணியாற்றுவதைப்போல, நத்தக்காடையூர், குட்டப்பாளையம், நல்லம்மாள்புரம் மற்றும் பிற இடங்களில் உள்ள பணியாளர்கள், தொழிலாளர்கள், பெரம்பலூர் மற்றும் அம்பத்தூர் காலணி அலகுகளிலோ அல்லது காங்கேயத்திற்கு அருகில் உள்ள திருப்பூர், முத்தூர், சித்தோடு ஆகிய காலணி அலகுகளிலோ வந்து பணியாற்றலாம் அல்லது, சொந்தமாகத் தொழில் தொடங்க விரும்புவோருக்குக் கதர் வாரியத் துறையின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின்கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின்மூலம் கடனுதவி அளிக்கப்பட்டு 25 விழுக்காடு முதல் 35 விழுக்காடு வரை மானியம் வழங்கி, அதிகபட்சமாக 8 இலட்ச ரூபாய் மானியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, எந்த ஒரு தனி நபரோ அல்லது சுய உதவிக் குழுக்களோ தோல் தொழில் செய்ய விரும்பினால் சம்பந்தப்பட்ட திருப்பூர் மாவட்ட கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறையின் உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்றுப் பயனடையலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

[2010 ஏப்ரல் 21

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முத்தமிழ் அறிஞர் அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்கள், நலிவடைந்து வருகிற கதர்த் துறை ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக, கடந்த ஆண்டு 12 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி அவர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்த்து வைத்த நல்ல வேளையிலே இன்றைக்குக் கதர்த் துறையை மேலும் வளர்ப்பதற்காக முதலமைச்சரிலிருந்து இங்கேயிருக்கின்ற சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை எல்லோருக்கும் கதர்த் துறைமூலமாகக் காலணிகள் வழங்குகிற திட்டத்தைச் செயல்படுத்தி, காலணி அலகுகளை வளர்ப்பதற்கான முயற்சிகளைக் கதர்த் துறை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, கதர்த் துணி மற்றும் கதர் இயக்கம் வளர்வதற்குச் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், முதலமைச்சர் உட்பட அத்தனைபேரும் ஆண்டுக்குக் குறைந்தபட்சம் ஓர் ஆயிரம் ரூபாய்க்காவது கதர்த் துணியை வாங்க வேண்டுமென்கின்ற கட்டாயத்தை கதர்த் துறைமூலமாக ஏற்படுத்த வேண்டும். முதல்வர் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கின்ற காரணத்தினாலே இதற்கு ஒரு நல்ல பதிலைத் தந்து, காந்தியும், வினோபாவும் கண்ட கதர் இயக்கத்தை வாழவைப்பார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர்த் துறையின் வளர்ச்சிக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள் நல்ல ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கள். இந்த யோசனையை முதலமைச்சர் ஐயா கலைஞர் அவர்களிடத்தில் கலந்தாலோசித்து செயல்படுத்த முயற்சிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:**ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]